IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.78/2020**

| DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|

| NAME | மாயவேல் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.06.2023

மனுவின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் கோவிலிலிருந்து 200 அடி தள்ளி மார்கபந்து வாரிசுதாரரான சுலோச்சனா அம்மாள் வகையறாவிடமிருந்து 04.10.2010 அன்று பத்திர எண்.2536/2010 முன்னிலைக்கு 905 1/2 சொத்து வாங்கினேன் என்றால் சரிதான்.

2. சர்வே எண்.6 எ/30 க்கு உண்டான பட்டா வா.சா.ஆ.16 என்றால் சரியல்ல. கோயில் இருக்கும் சர்வே எண்.6 எ/1 என்றால் சரியல்ல சர்வே எண்.6 எ/30 தான் கோயில் இருக்கும் இடத்தின் சர்வே எண் ஆகும்.

3. நான் இவ்வழக்கில் Ex.X.1 கோயிலுக்கு சம்பந்தப்பட்ட பட்டா தாக்கல் செய்துவிட்டு தற்பொழுது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோயில் இடத்திற்கு அசைன்மென்ட் பட்டா கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.15 நான் தாக்கல் செய்த அசைன்மென்ட் பட்டா கோயிலுக்கு சம்பந்தம் இல்லாத இடம் என்றால் சரியல்ல. Ex.X.1, வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16 ஆகிய ஆவணங்கள் இவ்வழக்கிற்காக போலியாக தயார் செய்யப்பட்ட தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதை நிருபிக்க நான் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. கோயில் பெயரில் இன்று வரை எந்த பட்டாவும் யார் பெயரிலும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோயில் அமைந்திருக்கும் இடம் கிராம நத்தம் என்றால் சரியல்ல.

5. தினமும் கோயிலில் பூஜை நடத்துவதற்காக தான் நான் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் WP.14983/2020 என்ற மனுவை தாக்கல் செய்து நான் ஆஜர் ஆகாததால் மன தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பீஸ் கமிட்டி போடப்பட்டதால் நான் இந்த மனுவை திரும்ப பெற்றுக் கொண்டேன். நான் சொல்வது போல் நான் மனுவை திரும்ப பெறவில்லை என்றால் சரியல்ல.

6. WP.14589/2021 பி.சா.ஆ.2 கொரோனா காலத்தில் திருவிழா நடத்துவதற்காகவும் தினமும் கோயிலில் பூஜை செய்வதற்காகவும் மனு தாக்கல் செய்தேன் ஆனால் கொரோனா காலம் என்பதால் தினமும் பூஜை மட்டும் செய்துக்கொள்ள கொரோனா விதிமுறைகளை கடைபிடிக்குமாறும் உத்திரவு வழங்கப்பட்டது. நான் சொல்வது போல் உத்திரவு வழங்கப்படவில்லை என்றால்

சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும் காவல் ஆய்வாளர் திருவிழா நடத்த மறுப்பு தெரிவித்தது எதிர்த்து மேற்சொன்ன மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள சங்கதிகளுக்கு மாறாக நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 ன் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. நான் நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் எந்த ஊர் கோவிலுக்கு, எந்த வித உருவ சிலையை செய்வதற்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்பது அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

8. வா.சாஆ.1 ன் அசல் தாக்கல் செய்யாமல் சாட்சிகளை விசாரணை செய்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

9.வா.சா.ஆ 3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் எந்த தேதியில் ஒப்பந்தம் எழுதப்பட்டது என்பது தெரியுமா என்றால் 2001 மற்றும் 2007 ஆம் ஆண்டு எழுதப்பட்டது தேதி மற்றும் மாதம் தெரியாது.

10.என் பெயரில் குடியாத்தத்தில் பத்திரம் வாங்கினேன். எவ்வளவுக்கு பத்திரம் வாங்கினேன் என்றும், எந்த தேதியில் வாங்கினேன் என்று தெரியாது வருடம் மட்டும் தெரியும். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதில் ஒப்பந்தப்படி எந்த கட்டிமும் கட்டப்படவில்லை என்றால் சரியல்ல.

11. ஒப்பந்தம் படி கடட்டிம் கட்டி இருந்தால் பஞ்சாயத்து அலுவலகத்தில் அப்ரு்வல் வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. அப்ரூவல் வாங்கியதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அப்ரூவல் வாங்கவில்லை.

12.ஒரு கட்டிடம் கட்டினால் கோயிலாக இருந்தாலும், வீடாக இருந்தாலும் அதற்கு பஞ்சாயத்தில் வரி வசூலிப்பாகர்கள் அந்த வரி ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் உள்ளது.

13.ஒரு கோயிலின் டிரஸ்ட் கோயில் என்றால் அதற்கு வரவு செலவு கணக்கை சரிபார்ப்பது வழக்கம் என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வருமான வரி கோயில் பெயரில் கட்டியுள்ளேனா என்றால் இல்லை என் பெயரில் கட்டியுள்ளேன்.

14.என் பெயரில் வருமான வரி செலுத்தியுள்ளேன். அதை தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். கோயில் சொத்துக்கும் பணத்திற்கும் என் பெயரில் வருமான வரி செலுத்த முடியாது என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15.வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் எழுதிக் கொடுத்தவர் கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொல்வது போல் வா.சா.ஆ.5 மற்றும் 6

ல் எழுதிக் கொடுத்தவர் கையொப்பம் இல்லை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் வா.சா.ஆ.5, 6, 7 ஆவணத்திலும் சி.மாயவேல் என்று வேறு ஒரு மையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யாருக்கோ எழுதிக் கொடுத்ததை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அதை எழுதிக் கொடுத்தவர்கள் அழைத்து உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

16.வா.சா.ஆ.8 மின் கட்டண அட்டையில் கோயில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் டிரஸ்ட் என்று குறிப்பிட்படட்டுள்ளது. தாவா கோயில் மின் கட்டண அட்டை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். டிரஸ்ட் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் டிரஸ்ட் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17.வா.சா.ஆ.10 ஆவணம் யாருக்கேனும் விருது வழங்கினால் அதற்கு உண்டான ஆவணங்கள் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். இதற்கும் கோயிலும் சம்பந்தம் இல்லை என்றால் சம்பந்தம் உள்ளது. வா.சா.ஆ10 க்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 க்கு உண்டான சிடி மற்றும் நெகட்டிவ் போடவில்லை என்றால் சரிதான். சிடி என்னிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

18. நான் மேல்வைத்துணையாங்குப்பம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். நான் தலைவராக இருந்த போது 100 நான் வேலை திட்டத்தில் கையாடல் செய்துவிட்டதாக என் மீது புகார் மனு தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. என் பெயரில் டிராக்டர் உள்ளது. எனது பெயரில் மணல் கடத்துவதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை. என் பெயரில் மேல்பட்டி காவல் நிலைய குற்ற எண்.93/2018 என் மேல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19.நான் எனது டிராக்டரை லீசுக்கு விட்டேன். அதை வழக்கு பதிவு செய்து எனது டிராக்டர் நீதிமன்றத்தில் உள்ளது. எனது பெயரில் இரண்டு முதல் தகவல் அறிக்கை உள்ளது என்றால் சரியல்ல. இப்பொழுது எதுவும் இல்லை. எனது பெயரில் சிவகுமார் என்பவர் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

20.தாவா கொயில் பரம்பறையாக எனக்கு சொந்தமானது என்று அறநிலையத்துறையில் Heriditory Trust என்ற முறையில் ஏதேனும் ஆவணம் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோயில் வருமானமும் உண்டியல் வருமானமும் தணிக்கை செய்து அறநிலைய துறையில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

21.மாண்பு மிகு உயர் நீதிமன்றத்தின் உத்திரவு படி திருவிழா நடத்தப்பட்டாதா என்றால் 2 வருடத்திற்கு முன்பு திருவிழா நடத்தப்பட்டது. 2020 மற்றும் 2021 ல்

திருவிழா நடத்தப்பட்டதற்கு ஆதாரமாக ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

22.மேளம், மற்றும் பந்தல் போடுபவர்களுக்கு பணம் கொடுப்பது சமத்டபந்தமாக கணக்கு வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் நான் திருவிழா நடத்தியதற்கான எண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். கடந்த 20 ஆண்டுகளாக திருவிழா நடத்தும் போது எவ்வளவு யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் கணக்கு வழக்கு புத்தகங்ஙககளை பார்த்து தான் சொல்ல முடியும் தற்போது என்றால் சொல்ல முடியாது.

23.தாவா கோயில் ஊரி கோயில் என்றாலும் எனக்கும் கோயிலுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் நான் வெறும் பக்தன் தான் என்றாலும் சரியல்ல. நான் பஞ்சாயத்து தலைவராக இருந்த போது மோசம் செய்தது போல் கோயில் சொத்தையும் அபகரிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24.என்னுடைய அஜராக செயலுக்காக கிராமமே திருவிழா நடத்த முடியாமல் உள்ளது என்றால் சரியல்ல. தாவா கோயிலுக்கும் எனது குடும்பத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்தவை அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.